உ

சிவமயம்.

# செய்திக் கடிதம்

**MITA(P) 106/03/2004**



**மரம்: 3** **கிளை 1**

*இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்*
*நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீ எழுந்து*
*என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க*
*பொன் வயிற்றுக் கணபதியே போற்றியெனப் போற்றுகின்றோம்.*

**2005/1** **14/02/2005**

## பொருளடக்கம்.

1.தலைவர் உரை
2.ஆசிரியர் உரை

**அ. நிறைவேறிய நிகழ்ச்சிகள்**

1.தொண்டர் குழு உபயம்
2.பொங்கல்
3.வருடாந்திர பொதுக்கூட்டம்
4.தைப்பூசம்
5.மகமை கூட்டம்

**ஆ. நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்**

1.கதை சொல்லும் கலை
2.சுற்றுலா
3.ஆச்சிமார் உபயம்.
4.வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்.

**இ. நகரத்தார் பக்கம்**

1. கவிதைத் தொகுப்பு
2. Nine ways to make people like you.
3. குறுக்கு எழுத்துப் போட்டி.

**ஈ. இதர செய்திகள்**

1.பிறப்பு
2.இறப்பு
3.புது உறுப்பினர்கள்
4.முகவரி மாற்றம்.
5.இதர மாற்றங்கள்.

**செய்திக் கடிதம்**
15A, தேங்க் ரோடு
சிங்கப்பூர் 238065
தொலைபேசி எண்: 6737 9393
http://www.sttemple.com
http://www.singainagarathar.com

## தலைவர் உரை

அன்புள்ள மன்ற உறுப்பினர்களே.

வணக்கம். என்னை இந்த 2005ம் ஆண்டிற்கான மன்றத் தலைவராக தேர்ந்து எடுத்தமைக்கு மிக்க நன்றி. சென்ற ஆண்டு சிறப்பாக பணியாற்றிய செயற்குழு உறுப்பினர்களுக்கு எங்கள் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டில் பர்மா பயணம் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளுக்கு திட்டமிட்டு வருகிறோம். எல்லாம் வல்ல ஸ்ரீ தெண்டாயுதபாணி திருவருளால் நல்லவிதமாகக் கை கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. உறுப்பினர்கள் அனைவரும் நிகழ்ச்சிகளுக்கு தவறாது வந்து கலந்து கொண்டு ஆதரவு தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

நடந்து முடிந்த தைப்பூச நிகழ்ச்சிக்கு பேராதரவு தந்து ஒத்துழைப்பு நல்கிய நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு" என்னும் பாரதியாரின் வாக்கிற்கேற்ப நாம் ஒன்றுபட்டு செயலாற்றுவோம்.

செயற்குழுவின் சார்பாகவும் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாண்டுப் பணிகளுக்கு உங்கள் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அன்புடன் வரவேற்கிறோம்.

அரு.கருப்பையா
தலைவர்



## ஆசிரியர் உரை

நகரத்தார்களுக்கு என் வணக்கம்.

நான் படித்தறிந்த, கேட்டறிந்த, கண்டறிந்த செய்திகளின் சுறுக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

"நகரத்தார்கள் எப்பொழுது சைவ சமயத்தில் சேர்ந்தார்கள், எப்பொழுது அதனை விட்டு விலகுவார்கள் என்று எனக்குத் தெரியும்" என ஒரு கூட்டத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் கூறினார்கள்.

எல்லோரும் வியப்புடன் அவரை நோக்கிய போது, சூரியனும் சந்திரனும் எப்போது உலகத்தில் தோன்றினார்களோ அப்போது நகரத்தார்கள் சைவ சமயத்தில் சேர்ந்தார்கள். சூரியனும் சந்திரனும் எப்போது உலகத்தில் இல்லாமல் போவார்களோ அப்போது நகரத்தார்கள் சைவ சமயத்தை விட்டு விலகுவார்கள் என பண்டிதமணி சொன்னதும் கூட்டத்தினர் கை தட்டி தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

இதிலிருந்து நகரத்தார் என்றும் சைவ சமயத்தை விட்டு விலகமாட்டார்கள் என்பது தெரிகிறது.

இது போலவே தவத்திரு குன்றக்குடி அடிகளார், நகரத்தார் சமூகம் செந்தமிழையும், சிவநெறியையும் வழி வழியாக வளர்த்து வரும் சமூகம் என்று கூறியிருக்கிறார்.

எனவே இன்றைய இளம் பெற்றோர் அவர்கள் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்தாலும் கூட தம்பிள்ளைகளிடம் முக்கியமாக வீட்டில் தமிழ் பேசுவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். தாய்மொழியில் சிறந்து விளங்குவதன் மூலம் நம் சிறார்கள் மற்ற மொழிகளை எளிதில் கற்றுக்கொள்வார்கள். தமிழையும் சைவத்தையும் நம் இரு கண்களாகக் கருதுவோம். சைவத்தைப் போற்றுவோம் தமிழை வளர்ப்போம்.

மங்கையர்க்கரசி செல்லப்பன்
ஆசிரியர்.

## அ. நிறைவேறிய நிகழ்ச்சிகள்

### 1.தொண்டர்குழு உபயம் [01-01-05]

இந்த ஆண்டும் ஆங்கிலப்புத்தாண்டு அன்று தொண்டர்குழு உபயம் நடைபெற்றது. 01-01-2005 அன்று மாலை 7 மணியளவில் தீப ஆராதனையும் அதனைத் தொடர்ந்து தமிழ் கடவுள் அருள்மிகு ஸ்ரீ தெண்டாயுதபாணி வெள்ளி ரதத்தில் திருக்கோவிலுக்குள் பவனி வந்து அருள் பாலித்தார். இதனைத் தொடர்ந்து தொண்டர்குழு உபயத்தில் விருந்தும் மிக விமரிசையாக நடைபெற்றது. தொண்டர்குழுவின் சேவை மேலும் சிறக்க எங்களின் மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### 2.பொங்கல் [14-01-05]

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பதற்கிணங்க எல்லோரின் மனதிலும் புது பொலிவுடனும் புத்துணர்ச்சியுடனும் இந்த தாரண ஆண்டு தைத்திங்கள் முதல் தேதி (14-01-05) நமது அருள்மிகு லயன் சித்தி விநாயகர் கோவிலிலும், ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலிலும் பொங்கல் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. வழக்கம் போல் இந்த ஆண்டும் நம் கோவிலில் இருந்து பொங்கல் காய்கறிகள் நம் சமூகத்தினருக்கு வழங்கப்பட்டது. கோவில் நிர்வாகத்திற்கு எல்லோர் சார்பிலும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரித்துக்கொள்கிறோம். ஆச்சிமார்களின் கை வண்ணத்தால் நமது திருக்கோவில் கலை வண்ணத்துடன் காட்சியளித்தது. இவர்களின் வண்ணக்கோலங்கள் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது. இவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி. இவர்களது கலைப்பணி தொடர எங்களது வாழ்த்துக்கள்

### 3.வருடாந்திர பொதுக்கூட்டம் [16-01-05]

அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் திருமண மண்டபத்தில் 16.01.2005 ஞாயிற்றுக்கிழமை மாலை நம் சங்கத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் மிகச்சிறப்பாக நடைப்பெற்றது. சென்ற ஆண்டின் தலைவர் திரு PL.அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமை ஏற்றுப் பொதுக்கூட்டத்தை நடத்திக்கொடுத்தார்கள். பிறகு தேர்தல் தலைவராக திரு SP.திண்ணப்பன் செட்டியார் மற்றும் திரு.தியாகராஜா செட்டியார் அவர்களும் பொறுப்பேற்று இந்த ஆண்டின் நிர்வாகக்குழுவை தேர்ந்தெடுத்தார்கள். கூட்டத்தினரால் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆண்டின் நிர்வாகக்குழு கீழ் வருமாறு.



| | |
|---|---|
| **தலைவர்.** | திரு. கருப்பையா.AR |
| **உப தலைவர்** | Dr. ஐங்கரன்.K |
| **செயலாளர்** | திரு. சுப்பிரமணியன்.T |
| **உதவிச்செயலாளர்** | திரு. பழனியப்பன். CT |
| **பொருளாளர்** | திரு. செல்வம். K |
| **உதவிப்பொருளாளர்** | திரு. பழனியப்பன்.RM |

### செயற்குழு உறுப்பினர்கள் விபரம்.

திரு.தியாகராஜன்.R
திரு.ஆறுமுகம்.A
திரு.பெரிய கருப்பன்.C
திரு.இராகவன்.V.
திரு.செல்லப்பன் மணி
திரு.அருணாசலம்.CT
திரு.முருகப்பன்.S.
திரு.வைரவன் RM.
திரு.அண்ணாமலை. M
திரு.இராமநாதன்.SP
திரு.இராஜா வெள்ளையப்பன்.
திரு.செல்வம்.K
திரு.சுப்பிரமணியன்.N.
திரு.திருநாவிற்கரசு.A
திரு.பழனியப்பா மணி (செந்தில்)

### தணிக்கையாளர்கள்.

திரு.அருணாச்சலம் (அருண்)
திரு.மணி சுப்பிரமணியன்.

இந்த ஆண்டு நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு பின் வருமாறு.

### கிட்டங்கி பிரதிநிதிகள்

கிட்டங்கி No: 1 திரு.பழனியப்பன்.RM
கிட்டங்கி No: 1A திரு.இராகவன்.V
கிட்டங்கி No: 1B திரு.வைரவன் RM.
கிட்டங்கி No: 09 திரு.செல்வம். K
கிட்டங்கி No: 15 திரு.கருப்பையா.AR

### செய்திக்கடிதக்குழு.

திருமதி.மங்கையர்க்கரசி செல்லப்பன்.
திரு.CT.அருணாசலம்.
திரு.இராகவன்.V
திரு.திருநாவிற்கரசு.A
திருமதி.நல்லம்மை பழனியப்பா மணி.

## 4.தைப்பூசம் [25-01-05]

சிங்கையில் இந்தியாவின் பாரம்பரியமாக கருதப்படும் தைப்பூசத்திருவிழா இந்த ஆண்டும் 25-01-05 அன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. நம் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி பல்வேறு வகைகளில் தொண்டாற்றி தைப்பூசம் சிறப்பாக நடைபெற பெரிதும் உதவினார்கள். தொண்டாற்றிய அனைத்து நெஞ்சங்களுக்கும் நம் மன்றத்தின் சார்பிலும், கோவிலின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

## 5.மகமைக்கூட்டம் [26-01-05]

தைப்பூசத்திற்கு மறுநாளான 26-01-05 அன்று இரவு மகமைக்கூட்டம் நடைபெற்றது. கடந்த ஆண்டு திரு. சு.நா.சு.நா.சிதம்பரம் செட்டியார் தலைமையில் கோவில் பணிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அவர்களுக்கு நம் சங்கத்தின் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆண்டு அருள்மிகு ஶ்ரீ தெண்டாயுதபாணி திருக்கோவிலின் மேலாண்மைக்குழுத் தலைவராக (கார்பார்) திரு லெ.நா.சுப்பையா செட்டியார் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு நம் மன்றத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அவர்களது நிர்வாகத்திற்கு நமது சங்கத்தின் ஒத்துழைப்பையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



# நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்.

## 1.கதை சொல்லும் கலை.[26-02-05]

வருகின்ற 26-02-05 சனிக்கிழமை, அன்று காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை நமது கோவிலின் திருமண மண்டபத்தில்,, குழந்தைகளுக்குப் பாவனையுடன் கதை சொல்லும் பயிலரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிலரங்கில் 3லிருந்து 7 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கதை சொல்லப்படும். மேலும் அவர்களுக்கு குரல் மற்றும் முக பாவனை செய்யும் முறையும் கற்றுக் கொடுக்கப்படும். இந்த பயிலரங்கில் பங்கு கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் கீழ் கண்டவிர்களிடம் பதிவு செய்து கொள்ளலாம்.

1. திருமதி.அன்னம் ஆறுமுகம்: 63619639
2. திருமதி.நல்லம்மை செந்தில் 64826344
3. திருமதி.வள்ளி பெரியகருப்பன் 94234330

அனுமதி இலவசம், எனினும் ஏற்பாட்டளர்களுக்கு ஏதுவாக இருக்க முன்பதிவு செய்தல் வேண்டும்.

குறிப்பு:
1.இந்த பயிலரங்கின் போது பெற்றோர்கள் அவர்கள் குழந்தைகளை தனியே விடும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.
2.இந்த நிகழ்ச்சி முழுவதும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு வட்டு (VCD or DVD) வடிவில் வெளியிடப்பட இருக்கிறது. அதனை பெற விரும்புவர்கள் நிகழ்ச்சியன்று VCDக்கு $8/-, DVDக்கு $10/- கொடுத்து பதிவு செய்து கொள்ளலாம்.
3.குழந்தைகளுக்கு சிற்றுண்டிக் கொடுக்கப்படும்

## 2. சுற்றுலா.[13-03-05]

13-03-2005, ஞாயிற்றுக்கிழமை அன்று பாசிர் ரிஸ் பூங்காவிற்கு (Pasir Ris Park, Elias Road) சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வயது வரம்பின்றி எல்லா வயதினரும் பங்கேற்கும் வண்ணம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். பகல் உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்படும்.காலை 8.30 மணியளவில் அருள்மிகு தெண்டாயுதபாணி கோவிலில் இருந்து பேருந்து சுற்றுலா தளத்திற்குப்புறப்படும்.

இதற்கான கட்டணம்.

| | |
|---|---|
| சொந்த வாகனத்தில் வருபவருக்கு | பேருந்தில் வருபவருக்கு |
| பெரியவர்கள் : $10.00 | பெரியவர்கள் : $12.00 |
| சிரியவர்கள் : $6.00 | சிரியவர்கள் : $8.00. |

இதில் அனைவரும் பங்கு பெற்று மகிழ்ச்சியடைய வேண்டும் என்பது எங்கள் விருப்பம். பங்குபெற விரும்புவோர் கீழ்க் கண்டவர்களிடம் வருகின்ற 03-03-2005க்குள்ளாக தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். கடைசி நேரப்பதிவை தவிர்த்து ஏற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டியது. மேலும் இந்த சுற்றுலாவிற்கு நன்கொடை, அன்பளிப்பு மற்றும் பரிசுப் பொருள்கள் கொடுக்க விரும்புவர்களும் கீழ் கண்டவர்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1.திருமதி. ஜெயமணி ராஜா. | : | 62715129. |
| 2.திருமதி. லதா முருகப்பன். | : | 68998232. |
| 3.திருமதி. உமா சுப்பரமணியன். | : | 65666964. |
| 4.திருமதி. வள்ளி கருப்பையா | : | 62679784. |
| 5.திருமதி. கலையரசி வைரவன் | : | 67596712. |

குறிப்பு: சொந்த வாகனத்தில் வருபவர்கள் 9.00 மணிக்குள் கீழ்க்கண்ட் இடத்திற்கு வரவேண்டியது. Pasir Ris Park, Elias Road: BBQ Pit, ,2,&3 Carpark E. (Bus No: 403 [Last Stop], From Pasir Ris MRT)

### 3. ஆச்சிமார் உபயம். [01-05-05]

இந்த ஆண்டும் ஆச்சிமார்களின் உபயம் (01-05-2005) அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது. அதனைக் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் செயலாற்ற இருக்கிறார்கள்.இவர்களிடம் பொருளுதவிகளையும் தாராளமாக வழங்கலாம்.

| | |
|---|---|
| திருமதி.சரஸ்வதி கண்ணப்பன் | 6760 4295. |
| திருமதி.மீனா சண்முகம். | 6474 4407. |
| திருமதி.உண்ணாமலை முருகப்பன். | 6388 5197. |
| திருமதி.தேவகி இராமநாதன். | |
| திருமதி.சீதா சுப்பையா. | 6281 4127. |
| திருமதி.இராதா அருணாச்சலம். | 6565 6324. |
| திருமதி.ஸ்வர்ணா செல்வம். | 6314 4590. |

2003ம் ஆண்டு சாரஸ்(SARS) நிதிக்காக 1000/- வெள்ளியும்
2004ம் ஆண்டு இந்தியாவில் உள்ள அடைக்காத்தாள் டிரஸ்டுக்கு 25000/- ருபாய் ஆச்சிமார்களால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது..



### 5.வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்.

இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் (6,7,8,மற்றும் 9) ஆகிய தினத்தில் பர்மா (Burma) அல்லது சைகோன் (Saigon, Vietnam) சுற்றுப் பயணம் செல்லலாம் என்று திட்டமிட்டுள்ளோம். இதற்கான செலவு நபர் ஒன்றுக்கு S$600 முதல் S$800 வரை இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதைப் பற்றிய உங்களுடைய மேலான ஆலோசனைகளை எங்களுடைய செயற்குழு உறுப்பினர்களிடம் நீங்கள் கூறலாம். உங்களுடைய ஆலோசனைகளைக் கொண்டுதான் எங்களால் மேற்கொண்டு எந்த திட்டமும் செய்யமுடியும்.

## நகரத்தார் பக்கம்

## 2005ல் புதுமைகள் செய்வோம் வாரீர்

பொன்னான நேரத்தையும், பணத்தையும் மிச்சபடுத்தவும், சுற்றச் சூழலைப் பாதுகாக்கவும், திறன்களை அதிகரிக்கவும், இந்த வருடம் நாம் நடத்த உள்ள நிகழ்ச்சிகளில் கீழ்கண்ட புதுமைகளைச் செய்ய எண்ணி உங்கள் முன் வைக்கிறோம். இவை பற்றிய தங்களின் மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதம், தொலைபேசி அல்லது மின் அஞ்சல் வழியாக எங்களுக்குத் தெரிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுகொள்கிறோம்.

1. **நேரம் தவறாமை (Punctuality)** : ஒவ்வொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட்ட நேரத்தில் துவங்கி, குறிப்பிட்ட நேரத்தில் முடிப்பது.

2. **பரிசுகள் :** முடிந்தவரை அறிவையும் எண்ணங்களையும் மேம்படுத்தும் தமிழ்ப்புத்தகங்களையே பரிசாக அளிப்பது. உதாரணமாக ராமாயணம், மஹாபாரதம், வேதாளம் சொல்லும் கதை, தெனாலி ராமன் கதை, சுயமேம்பாட்டு நூல்கள், கவிதைகள் போன்றவை.

3. **முன்பதிவு** :நிகழ்ச்சிகளுக்கு, ஒருங்கினைப்பாளர்களிடம் முன்கூட்டியே பதிந்து கொள்ளுதல்.

4. **பெயர் அட்டை :** நிகழ்ச்சிகளின்போது, பெயர் எழுதிய அட்டைகள் அல்லது ஒட்டுவில்லைகள் (ஸ்டிக்கர்) கொடுக்கலாம் என்று நினைத்துள்ளோம். அப்படிக் கொடுத்தால் அதை நிகழ்ச்சி முடியும் வரை அணிந்து கொள்ள வேண்டும். ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ள இது ஏதுவாக இறுக்கும்.

5. **ஆரோக்கியமான உணவு :** முடிந்தவரை சாப்பாட்டின் போது சமைக்காத காய்கறிகள், பழங்கள் ஒரு வகை தரப்படும்.

6. **ஆதரவாளர்கள் (Sponsors)** : உறுப்பினர்கள் தனி நபர்களாகவோ இரண்டு மூன்று பேராக சேர்ந்தோ நிகழ்ச்சிகளுக்கு, உணவு, அல்லது பரிசுக்கான தொகையை வழங்கலாம். தங்கள் பிறந்தநாள், திருமண நாள் போன்றவற்றை முன்னிட்டு இதை செய்யலாம். அவர்கள் விருப்பப் பட்டால் அவர்களது பெயர் செய்திக்கடிதத்தில் வெளியிடப்பட்டு நன்றி தெரிவிக்கப்படும்.

7.**குடிநீர் :**Picnic-க்கு வரும் போது அவரவர் வீட்டிலிருந்து அவரவர்களுக்கு தேவையான குடி நீரை கொண்டு வந்தால், பிளாஸ்டிக் பாட்டில் குப்பைகளை குறைக்கலாம்.



## கோவில் திருப்பணியில் நகரத்தார்.

வாழ்க்கையை வளப்படுத்த
வழிதேடிச் சென்ற இடமெல்லாம்,
இறைப்பணி செய்வதவற்கு மட்டும்
இவர்கள் மறந்ததில்லை.

தொலை நோக்கு பார்வையுடன்
தொடங்கிய திருப்பணி
நமக்களித்த வசதி தான்
நகரத் தங்கும் விடுதிகள்.

ஆலயம் அமைத்தது மட்டும் இன்றி
ஆகம பூஜைகளை அன்றாடம் செய்வதும்,
ஓதுகின்ற சைவத் திருமுறைகளில்,
ஓங்கு புகழ் பெற்றதும் தனிச்சிறப்பு.

தைப்பூசத் திருநாளைத்
தென்கிழக்கு ஆசியாவின்
பாரம்பரியம் ஆக்கியதில்
பெரும்பங்கு நம்முடையது தான்.

-சித. அருணாசலம்.

## NINE WAYS TO MAKE PEOPLE LIKE YOU

1 Don’t criticize, Condemn or Complain.
2 Give honest, sincere appreciation.
3 Arouse in the other person an eager want.
4 Become genuinely interested in other people.
5 Smile.
6 Remember that a man’s name is to him the sweetestand most important sound in any language.
7 Be a good listener. Encourage others to talk about themselves.
8 Talk in terms of the other man’s interest.
9 Make the other person feel important and do it sincerely.

**Collection. Rm.Vairavan.**

## குறுக்கு எழுத்து போட்டி.

நமது ஒன்பது நகரத்தார் கோவில்களின் இறைவன் மற்றும் இறைவியின் பெயர்கள் கீழே உள்ள கட்டங்களில் ஒளிந்துள்ளன. அதற்கான குறிச்சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கண்டுபிடியுங்கள். விடை அடுத்த செய்திக்கடிததில்.

| | | | |
|---|---|---|---|
| நேமம் கோவில் | 2,5 | வயிரவன் கோவில் | 3,3 |
| மாத்தூர்க் கோவில் | 16,8 | இளையாத்தங்குடிக் கோவில் | 14,7 |
| சூரைக்குடிக் கோவில் | 4,1 | இலுப்பைக்குடிக்கோவில் | 13,5 |
| வேலங்குடிக் கோவில் | 9,11 | இரணியூர்க் கோவில் | 1,10 |
| பிள்ளையார்ப்பட்டிக் கோவில் | 6,15,10,12. | | |




- திருநாவிற்கரசு.A



## ஈ. இதர செய்திகள்

**பிறப்பு** :Ref No:L126, நம் உறுப்பினர் திரு வயி. வயிரவன், சௌந்தரநாயகி தம்பதியருக்கு 22.11.2004 நாச்சம்மை சிவசந்தோஷி வைரவன் என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது. இம் மழலை அனைத்து செல்வங்களும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

**இறப்பு** :கண்டரமாணிக்கம், இலுப்பைக்குடி கோவிலைச் சேர்ந்தவரும், சீதை ஆச்சி அவர்களின் கணவருமான திரு.N. ஆவிச்சி செட்டியார் (Ref No: Y0031), அவர்கள் 4-01-2005 இறைவனடி சேர்ந்தார்கள். அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### புது உறுப்பினர்கள்.

| Ref . No. Y0402 | **CHOCKALINGAM SIVAKUMAR** |
|---|---|
| Kittangi No. 1B | BLK 19, #05-318 |
| MATHUR (ARUMBAKKUR) | CHAI CHEE ROAD<br>SINGAPORE 461019 |
| KARAIKUDI | Res. Tel. 62430437 |

| Ref . No. Y0403 | **SARASWATHI W/O SIVAPRAGASAM** |
|---|---|
| Kittangi No. 09 | 77, SEMBAWANG HILLS DRIVE |
| VAIRAVAN (PERIA VAGUPPU) | SINGAPORE 575931<br>Off.Tel. 62354007 |
| KILASIVALPATTI | |

| Ref . No. Y0404 | **PALANIAPPAN.RM** | **VALLIKKANNU** |
|---|---|---|
| Kittangi No. 15 | BLK 446, #07-297 | |
| PILLAIYARPATTI | CHOA CHU KANG AVE 4 | |
| ARIMALAM | SINGAPORE 680446<br>Res.Tel. 67645412, Mobile : 93869955<br>Email : rmpala@rediffmail.com | |

| Ref . No. Y0405 | **MUTHU VENKATACHALAM** | **R.NACHAMMAI** |
|---|---|---|
| Kittangi No. 09 | Blk 20, #07-04 | |
| VAIRAVAN (PILLAYAR) | CANBERRA DRIVE<br>SINGAPORE - 768425 | |
| PALLATHUR | Res.Tel. 65555814, Mobile : 98536541<br>Email : chalam@chalam.com | |

## முகவரி மாற்றம்.

| Ref. No: Y0045 | **GANAPATHY. A** | **MEENA GANAPATHY** |
|---|---|---|
| BLK 707, #11-82,<br>STREET 71,<br>TAMPINES 520707;<br>PH: 67844640, HP: 90218604. EMAIL:<br>PLANETGANA@REDIFFMAIL.COM | | |

| Ref. No: L124 | **VAIRAVAN.RM** | **SATHAMMAI@LATHA** |
|---|---|---|
| BLK 37, LOBBY A,#15-04<br>EVERGREEN PARK<br>HOUGANG AVE 7<br>SINGAPORE 538803<br>PH: 6489-9846, HP: 97504503 | OFF: SAP ASIA PTE LTD.<br>47, SCOTTS ROAD<br>#16-00, GOLDBELL TOWERS<br>SINGAPORE 228233<br>PH: 67686220 | |

| Ref. No: Y0069 | **RAMANATHAN.KM** | **MEENAKSHI.RM** |
|---|---|---|
| BLK 283, #10-253<br>TOH GUAN ROAD<br>SINGAPORE : 600283<br>PH: 66650456, HP: 96222447 | | |

| Ref. No: Y0072 | **MURUGA PALANIAPPAN** | **ALAMELU.M** |
|---|---|---|
| BLK 519,#11-275<br>WOODLANDS DRIVE 14<br>SINGAPORE 730519<br>PH: 68913019, HP: 92384091 | | |

| Ref. No: Y0324 | **GANESH. RM** | **MUTHU SORNAVALLI** |
|---|---|---|
| BLK 102A, #05-444<br>PUNGGOL FIELD<br>SINGAPORE 821102<br>PH: 67263171, HP:91289095<br>Rmg-95@hotmail.com | OFF: 28, ANG MO KIO INDUSTRIAL<br>PARK 2<br>SINGAPORE | |

| Ref. No: L021 | **CHOCKALINGAM.R** | **UMAYAL** |
|---|---|---|
| BLK 287B, #12-342<br>JURONG EAST ST 21<br>SINGAPORE 602287<br>PH: 68973454, HP: 96165641<br>CHOCK@CHOCKZ.COM | R.CHOCKALINGAM & ASSOCIATES.<br>CERTIFIED PUBLIC ACCOUNTANTS.<br>63 ROBINSON ROAD<br>#06-01, AFRO ASIA BUILDING<br>SINGAPORE 068894<br>PH: 62210067 | |



| Ref. No: Y0129 | **NAGAPPAN** | **SOLACHI** |
|---|---|---|
| BLK 435, #03-129<br>TAMPINES ST 43<br>SINGAPORE 520435<br>HP: 91849250 | | |

| Ref. No: Y0013 | **THIRUNAVIRKARASU.A** | **CHITTAL.T** |
|---|---|---|
| BLK 229, #09-108<br>BUKIT BATOK EAST AVE 3<br>SINGAPORE 650229<br>PH: 68972648, HP: 9106 0691 | | |

| Ref. No: L115 | **SUBRAMANIAN.R** | **UNNAMALAI** |
|---|---|---|
| BLK 31, JLN DUSUN (OFF BALESTIER ROAD)<br>#07-01, GALLERY FIFTEEN<br>SINGAPORE 329370<br>PH: 62535246, HP: 9101 0792 | | |

## இதர மாற்றங்கள்.

KITTANGI CHANGES:
REF NO: Y401, C.PERIYAKARUPPAN, CHANGE FROM 01A TO 09.
REF NO: L139, MANI P.M, CHANGE FROM 1 TO 1B.

NAME CHANGES:
REF NO: Y0094, CHANGE FROM VE.MEYAPPAN TO VE.MEYYAPPAN.